## சொற்பொழிவு

புதுச்சேரி, பிப். 2–

புதுச்சேரி அரசு பொறியியல் கல்லூரி, மின்னணு மற்றும் தொடர்பியல் துறையின் சுத்தம், சுகாதாரம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் சங்கம் சார்பில், காந்தியடிகள் வாழ்க்கை நெறிமுறைகள் எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடந்தது.

அன்னை தெரச முதுகலைப் பட்டப்படிப்பு மற்றும் நல வாழ்வு அறிவியல் ஆராய்ச்சி நிறுவன முதல்வர் கோபால் பேசினார்.

கம்ப்யூட்டர் அறிவியல் துறை பேராசிரியர் விவேகானந்தன், மின்னணு மற்றும் தொடர்பியல் துறை தலைவர் நாகராஜன் பங்கேற்றனர்.



புதுச்சேரி ஸ்டெப்ஸ் அகாடமியில், ஆங்கில பயிற்சி முடித்தவர்கள், அகாடமியின் நிர்வாகி செந்தில்வேலனுக்கு, சால்வை அணிவித்தனர்.

# ஆங்கில மொழியை எளிதாக கற்க சிறப்பு பயிற்சி

## பவர் இங்கிலீஷ் பயின்றவர்கள் புகழாரம்

புதுச்சேரி, பிப். 2–

ஸ்டெப்ஸ் அகாடமியின் பவர் இங்கிலீஷ் பயிற்சி, எங்களின் தயக்கம், பயத்தை போக்கி, தன்னம்பிக்கையை வளர்த்துள்ளது என, பயிற்சி முடித்தோர் கருத்து தெரிவித்தனர்.

ஆங்கிலம் சரளமாக பேச தெரியாததால், திறமை இருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் பலர் முடங்கியுள்ளனர். அவர்களுக்கு உதவிடும் வகையில், புதுச்சேரி 'ஸ்டெப்ஸ்' அகாடமி, ஆங்கில மொழியை எளிமையாக, அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் கற்பித்து வருகிறது. இங்கு, வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் செயல்வழி முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அகாடமியில், தினசரி வகுப்பு மற்றும் ஞாயிற்றுக் கிழமை வகுப்பு என இரண்டு விதமாக நடத்தப்படும் வகுப்புகளில், புதுச்சேரி, விழுப்புரம், கடலூர், சிதம்பரம், விருத்தாசலம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், தொழில் முனைவோர், இல்லத்தரசிகள் என பல தரப்பினரும் பயன் பெற்று வருகின்றனர்.

'ஸ்டெப்ஸ்' அகாடமியில் நடைபெற்று வந்த, 9வது பேட்ஜ் பவர் இங்கிலீஷ் பயிற்சி வகுப்பின் நிறைவு விழா நேற்று நடந்தது.

ஸ்டெப்ஸ் அகாடமி நிர்வாகி செந்தில்வேலன் கூறுகையில், பவர் இங்கிலீஷ் பயிற்சி, வழக்கமான ஸ்போக்கன் இங்கிலீஷ் பயிற்சியில் இருந்து மாறுபட்டு, நீச்சல், டிரைவிங் கற்றுக் கொள்வதுபோல், செயல்வழி முறையில் கற்றுத்தரப்படுகிறது. ஆங்கிலத்தின் நுட்பமான விஷயங்கள் கூட எளிதாக, இம்முறையில் கற்க முடியும் என்றார்.

ஸ்டெப்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்தவர்கள் கூறியது:

**சிவக்கொழுந்து (வியாபாரி):** ஆங்கில பயிற்சி எனக்கு தன்னம்பிக்கையை கொடுத்துள்ளது. என் திறமையை வெளிகொண்டு வர உதவியது. வழக்கமான ஆங்கில பயிற்சி வகுப்பு போன்று இல்லாமல், எளிதில் புரியும் விதமாக இருந்தது. பயிற்சிகள் அனைத்தும் உயர்த்த தரத்தில் இருந்தன.

**சிந்துஜா, சித்தன்குடி (கல்லூரி மாணவி):** ஆங்கில பயிற்சி வித்தியாசமான அனுபவமாக இருந்தது. ஆங்கிலம் பேசுவதற்கு இருந்த தயக்கம், பயம், பயிற்சி முடித்த பிறகு நீங்கிவிட்டது. ஆங்கிலத்தை செயல் வடிவமாக கற்றுக் கொடுத்ததால் எளிதாக இருந்தது.

**செல்வி ஷாம்லி, புதுச்சேரி (செவிலியர்):** பணியாற்றும் மருத்துவமனையில், டாக்டர்கள் பேசினால் நான் பதில் பேசாமல், கேட்டு கொள்வேன். பயிற்சிக்கு பிறகு, டாக்டர்களின் கேள்விகளுக்கு, தைரியமாக பதில் அளிக்கிறேன். வெளிநாட்டினர் பேசும் ஆங்கிலத்தை கூட எளிதாக புரிந்து, பதில் அளிக்க பழகி விட்டேன்.

**கோகுலராஜன், புதுச்சேரி (பொறியியல் மாணவர்):** ஆங்கிலத்தில் பேசுபவர்களிடம் பதில் அளிக்க தயங்குவேன். இந்த பயிற்சிக்கு பின்பு, தற்போது சுற்றி 60 பேர் இருந்து ஆங்கிலத்தில் கேள்வி கேட்டால் கூட பதில் அளிப்பேன்.

பயிற்சிக்கு பின்பு, என் குரல் வளம் அதிகரித்துள்ளது. நேர்முக தேர்வில், எப்படி பங்கேற்பது, குழு கலந்தாய்வு, இன்டர்வியூவில் எப்படி பதில் கூறுவது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப் பட்டது.

**மாணவர் சேர்க்கை துவக்கம்:** 10வது பேட்ஜ் ஆங்கில பயிற்சி வகுப்பு, வரும் பிப்., 15ம் தேதி துவங்குகிறது. பயிற்சிக்கான மாணவர் சேர்க்கை நடந்து வருகிறது. பயிற்சியில் பங்குபெற விரும்புவோர், ஸ்டெப்ஸ், எண் 31, நீடராஜப்பையர் வீதி – காந்தி வீதி சந்திப்பு, அமுதசுரபி அருகில், புதுச்சேரி–1, என்ற முகவரியிலோ, 9894919412 என்ற மொபைல் எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

## அனைத்து கிழமை நாட்களும் 4 முறை வரும் அபூர்வ பிப்ரவரி

– நமது நிருபர் –

ஒவ்வொரு ஆண்டும் 12 மாதங்களில், ஒவ்வொரு மாதத்திலும் பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை முதல் சனிக்கிழமை வரை ஏதாவது மூன்று கிழமைகள், ஐந்து முறையும், மற்ற கிழமைகள், நான்கு, மற்றும் மூன்று முறை வருவது வழக்கம்.

இந்தாண்டு பிப்ரவரி, அபூர்வ மாதமாக உள்ளது. வாரத்தின் முதல் நாள் ஞாயிறு துவங்கி, சனிக்கிழமை வரை, அனைத்தும், முறையே நான்கு முறை வந்து முடிவடைகிறது. கடந்த, 2014 பிப்ரவரி, சனிக்கிழமை துவங்கி, வெள்ளிக் கிழமை முடிந்தது.

## பழநியில் பக்தர்கள் 5 மணி நேரம் காத்திருப்பு

பழநி, பிப். 2–

தைப்பூசவிழாவை முன்னிட்டு, பழநி மலைக்கோவிலில் குவியும் பக்தர்கள், ஐந்து மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

பாதயாத்திரைக்கு புகழ் பெற்ற பழநி தைப்பூச விழா துவங்கியுள்ளதால், சென்னை, திருச்சி, மதுரை, கோவை, காரைக்குடி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் பாதயாத்திரையாக வந்த வண்ணம் உள்ளனர். நேற்று விடுமுறை தினம் என்பதால் வழக்கத்தை விட கிரி வீதிகள், யானைப்பாதை, படிப்பாதைகளில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. இடும்பன் குளம், சண்முக நதியில் ஏராளமான பக்தர்கள் நீராடினர்.

**நீண்டநேரம் காத்திருப்பு:** வெளியூர் பக்தர்கள், ரோப் கார், வின்ச் ஸ்டேஷனில், இரண்டு மணி நேரம் காத்திருந்து மலைக்கோவிலுக்கு சென்றனர். மலைக்கோவில் வெளிப்பிரகாரம் முழுவதும் பக்தர்கள் கூட்டம் நிரம்பியிருந்தால், ஐந்து மணி நேரம் வரை காத்திருந்து, தரிசனம் செய்தனர்.

# துருக்கியில் இருந்து திரும்பிய 9 பேரிடம் போலீசார் விசாரணை

பெங்களூரு, பிப். 2–

துருக்கி வழியாக சிரியா நாட்டிற்கு, சுற்றுலா விசாவில் நுழைய முயன்ற, சென்னையை சேர்ந்த சாப்ட்வேர் இன்ஜினியர் உட்பட ஒன்பது பேரை, துருக்கி அதிகாரிகள், இந்தியாவுக்கு திருப்பி அனுப்பினர்.

கடந்த, டிச., 24ம் தேதி, பெங்களூரு கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்திலிருந்து டூரிஸ்ட் விசாவில், சென்னையைச் சேர்ந்த முகமது அப்துல் அஹத், 46, என்பவர், மனைவி மற்றும் ஐந்து குழந்தைகளுடன், துருக்கி நாட்டில் உள்ள இஸ்தான்புல் நகருக்கு புறப்பட்டார்.

இவர்களுடன், தெலுங்கானா மாநிலம், கம்மம் மாவட்டத்தைச் சேர்ந்த, ஜாவித் பாபா, 24, கர்நாடகா மாநிலம், ஹாசன் மாவட்டத்தைச் சேர்ந்த, இப்ராகிம் நவுபால், 24, ஆகியோரும் சென்றனர்.

பெங்களூரிலிருந்து புறப்பட்ட இவர்கள், இஸ்தான்புல் விமான நிலையத்தில் இறங்கினர். துருக்கியில், சுற்றுலா செய்வதற்கு பதிலாக, சிரியாவுக்குள் நுழைய முயற்சித்துள்ளனர்.

துருக்கி அதிகாரிகள் கேள்விகளுக்கு சரியான பதில் சொல்லாததால், அவர்களிடமிருந்த அனைத்து ஆவணங்களும் பரிசோதிக்கப்பட்டது.

ஐ.எஸ்.ஐ.எஸ்., பயங்கரவாதிகள் இயக்கத்தில் சேர, சிரியா செல்ல முயற்சித்திருக்கலாம் என்ற கருத்தில், இஸ்தான்புல் விமான நிலையத்திலிருந்து ஒன்பது பேரையும், கடந்த, 30ம் தேதி, இந்தியாவுக்கு திருப்பி அனுப்பினர்.

இதை தொடர்ந்து, மத்திய உளவுத்துறை அதிகாரிகள், பெங்களூரு குற்றப்பிரிவு (சி.சி.பி.,) போலீசாருக்கு, ஒன்பது பேர் பற்றிய தகவலை அனுப்பியிருந்தனர்.

பெங்களூரு சர்வதேச விமான நிலையத்தில் காத்திருந்த, சி.சி.பி., போலீசார், அவர்கள் வந்திறங்கியவுடன் அழைத்துச் சென்றனர்.

போலீஸ் தரப்பில் கூறியதாவது:

சிரியாவிலுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ்., பயங்கரவாதிகள், தங்கள் இயக்கத்தை பலப்படுத்த, இந்தியாவில் உள்ள டாக்டர்கள், இன்ஜினியர்கள், விஞ்ஞானிகளுக்கு, இணையதளங்கள் மூலம் அழைப்பு விடுத்து வருகின்றனர்.

இதையடுத்து, அவர்கள், சிரியா செல்ல முயற்சித்திருக்கலாம். துருக்கி அரசு சந்தேகப்பட்டதன் பேரில், பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களிடம் விசாரணை நடத்தி வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# வில்லுப்பாட்டு மூலம் திருக்குறள் போதித்து டில்லியை கலக்கிய தமிழக கலைஞர்கள்

புதுடில்லி, பிப். 2–

டில்லியில் நடைபெறும், 'சர்வதேச கதை சொல்லும் கலைஞர்கள் திருவிழா'வில், தமிழகத்தைச் சேர்ந்த வில்லுப்பாட்டு கலைஞர் வேட்டராயன் குழுவினர், திருவள்ளுவர், மகாத்மா காந்தியின் கருத்துக்களை மையப்படுத்தி வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடத்தியது, அனைவரையும் வெகுவாக கவர்ந்தது.

'இன்டர்நேஷனல் ஸ்டோரி டெல்லர்ஸ் பெஸ்டிவல்' எனப்படும் சர்வதேச கதை சொல்லும் கலைஞர்கள் திருவிழா, டில்லியில் நடந்து வருகிறது. தமிழகத்தின் திண்டிவனத்தைச் சேர்ந்த, வேட்டராயனின் வில்லுப்பாட்டு குழுவினரும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



தூய்மையான இந்தியாவை உருவாக்க, காந்தியின் போதனைகளை வில்லுப்பாட்டு மூலம் விளக்கிய இந்த குழுவினர், கடைசி வரை சத்திய வழியில் நடந்த புராண கதாபாத்திரமான அரிச்சந்திரன் கதையையும் மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

இதுதவிர, திருக்குறளில் கூறப்பட்டுள்ள பல்வேறு நல்ல கருத்துக்களும், இவர்களின் வில்லுப்பாட்டில் இடம் பெற்றது.

தமிழகம் மற்றும் கேரளாவின் தொண்மையான கலைகளுள் ஒன்றான வில்லுப்பாட்டு கலை மூலம் மக்கள் மத்தியில் நல்ல கருத்துக்களை கொண்டு சேர்க்கும் முயற்சியில், வேட்டராயன் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

திருக்குறளைக் குறித்து இவர்கள் கூறும் போது, 'வள்ளுவர் எழுதிய எந்த குறளிலும், தமிழ் என்ற வார்த்தை இடம் பெறவில்லை; எந்தக் கடவுளையும் குறிப்பிட்டு சொல்லவும் இல்லை.

கடவுள் ஒருவனே என்ற கோட்பாட்டில், வள்ளுவருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்ததை அவரின் குறள்கள் வெளிப்படுத்துகின்றன' என்றனர்.

வேண்டாம்
குண்டு பல்பு




R-2015010194-1



R-2015010192-1



R-2015009912-1



R-2015006386-1

Electro Technical Officers' Course (ETO)
( without High Voltage )
( Approved by Directorate General of Shipping, Govt. of India. )




4 Months Fully Residential Course

பாடத்திட்டம் : கப்பலில் எலக்ட்ரிக்கல் அலுவலர்களாக பணிபுரிவதற்குரிய பாடம்.
தகுதி : Diploma / Degree in EE / EEE/ ECE/ EIE ( Physics, Chemistry & Mathematics பாடங்களுடன் கூடிய +2 வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.)
வயது : 28 வயதிற்குள்
சேர்க்கை முறை : விண்ணப்பிக்கும் முறை, கல்விக்கட்டணம், மருத்துவ பரிசோதனை மற்றும் விண்ணப்பத்திற்கு இணையதளம் www.rlins.edu.in ஐ பார்க்கவும்.
கல்விக்கட்டணம் 2 தவணைகளில் செலுத்தலாம்.
(அ)
098940 - 07317 தொடர்புகொள்ளவும்

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய தேதி : பிப்ரவரி 14, 2015
வகுப்புகள் துவங்கும் நாள் : மார்ச் 2, 2015

RLINS ல் கப்பலில் பணிபுரிய தேவையான 4 மாத (ETO) பயிற்சி → பயிற்சி நிலை எலக்ட்ரிக்கல் ஆபீசர் → ஜுனியர் / அஸிஸ்டெண்ட் எலக்ட்ரிக்கல் ஆபீசர் → எலக்ட்ரிக்கல் ஆபீசர் (மாத சம்பளம் ரூ.82,500லிருந்து ரூ.1,50,000 வரை)

R.L. INSTITUTE OF NAUTICAL SCIENCES
( An ISO 9001 : 2008 Organisation )
SAIL TO PROSPER
TVR Nagar, Aruppukottai Road, Madurai - 625 022. Ph: 0452 - 391 8615 / 391 8614 e-mail : rlins@rlins.in